செய்தி வெளியீடு எண்.126 நாள் 28.02.2017

**திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகத்தில் சமூக நலத்துறை சார்பாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 544 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 46 லட்சத்து 25ஆயிரத்திற்கான திருமண உதவித்தொகையும், 2176 கிராம் (272 சவரன்) தங்கத்தினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் வழங்கினார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகத்தில் சமூக நலத்துறை சார்பாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 544 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 46 லட்சத்து 25ஆயிரத்திற்க்கான திருமண உதவித்தொகையும், 2176 கிராம் (272 சவரன்) தங்கத்தினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.02.2017) வழங்கினார்.

மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது “ மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்துவதற்கு செயல்படுத்தி வருகிறது. அவர்கள் கொண்டுவந்த திட்டங்களில் விலையில்லா அரிசி, தாலிக்கு தங்கம் வழங்குதல், விலையில்லா கறவை மாடு மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டங்கள் ஏழை மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் திட்டங்களாகும்.

ஏழை பெண்களின் திருமணத்திற்கு கொண்டுவரப்பட்ட திட்டத்தினால் 10-ஆம் மற்றும் +2 வகுப்பு முடித்துள்ள பெண்களின் திருமணத்திற்கு ரூ.25 ஆயிரம் திருமண உதவித் தொகையும், தாலிக்கு தலா 4 கிராம் தங்கமும், பட்டப்படிப்பு/பட்டயப்படிப்பு படித்த பெண்களின் திருமணத்திற்கு ரூ.50 ஆயிரம் திருமண உதவித் தொகையும், தாலிக்கு தலா 4 கிராம் தங்கமும் தமிழக அரசு வழங்கி வருகிறது. மேலும் இந்த திட்டமானது மே 2016 முதல் தாலிக்கு 8 கிராம் தங்கமாக உயர்த்தி வழங்கப்படவுள்ளது. இன்று வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 544 பயனாளிகளுக்கு 272 சவரன் தங்கம் வழங்கப்படவுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் 2011 முதல் 28720 பயனாளிகளுக்கு ரூ.91 கோடியே 66லட்சத்து 25ஆயிரத்திற்கான நிதியும் 114.88 கிலோ தங்கமும் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. எனவே மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் அரசாக விளங்குகிறது. அது என்றைக்கும் மக்களின் நலனை கருதியே செயல்படும் அரசாக திகழும்” என்று கூறினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது “ தமிழக அரசு பெண்களின் பாதுகாப்பு மற்றும் தனி கவனம் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் 10-ஆம் மற்றும் +2 வகுப்பு முடித்துள்ள பெண்களின் திருமணத்திற்கு ரூ.25 ஆயிரம் திருமண உதவித் தொகையும், தாலிக்கு தலா 4 கிராம் தங்கமும், பட்டப்படிப்பு/பட்டயப்படிப்பு படித்த பெண்களின் திருமணத்திற்கு ரூ.50 ஆயிரம் திருமண உதவித் தொகையும், தாலிக்கு தலா 4 கிராம் தங்கமும், வழங்கி வருகிறது. இதனால் பெண்களின் கல்வி தரம் உயர்ந்து வருகிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் 2011 முதல் இதுவரை 28,720 பயனாளிகளுக்கு, ரூ.91 கோடி மதிப்பிலான நிதி கணக்கில் 14360 சவரன் தங்கம் திருமண உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.” என்று கூறினார்.

வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த 544 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 46 லட்சத்து 25000-திற்கான திருமண உதவித்தொகையும், 2176 கிராம் (272 சவரன்) தங்கத்தினை பட்டம் மற்றும் பட்டையம் படித்த 441 பயனாளிகளுக்கும், பத்தாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு படித்த 103 பயனாளிகளுக்கு திருமண உதவித்திட்டத்தின் கீழ் தங்கம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.அலெக்ஸாண்டர், மாவட்ட சமூக நல அலுவலர்(பொ) திருமதி.எஸ்.சங்கீதா, அம்பத்தூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.வீ.வீரப்பன், மதுரவாயல் வட்டாட்சியர் திரு.மூ.குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~